இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 19-10-2024

# பட்டியலின மக்கள் பாதுகாவல் அரசு - 2

பட்டியலின மக்களுக்கான நலத்திட்டங்கள் எவை எவை என்ற சாதனைகளை மேலும் பார்ப்போம்....

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் கல்வி பயில கட்டணச் சலுகைகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. முனைவர் பட்டப் படிப்பிற்கான உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் 2,974 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயில மாணவர்களுக்கான வருமான உச்சவரம்பு 8 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 31 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உணவுக்கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாகவும், கல்லூரி மாணக்கர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் இவ்வரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உண்டு உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் என 381 அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் 166 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சாலை வசதி, சிறு கட்டுமானப் பணிகள், குடிநீர் வசதி மற்றும் சிறு பாலங்கள் கட்டுதல் முதலிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஆண்டுதோறும் ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 4,624 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டமானது ஊரகப் பகுதிகள் மட்டுமல்லாது, நகர்ப்புறங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ இதேபோல் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் பழங்குடியினர் குடியிருப்புகளில் 475 கோடி ரூபாய் செலவில் 25,262 அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 'தாட்கோ'வால் செயல்படுத்தப்படும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் கடந்த நிதியாண்டில் மட்டும் 10,466 பயனாளிகளுக்கு 152 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதியம் 2022 - 23ஆம் நிதியாண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் துவங்கப்பட்டது.

★ 2022 ஆம் ஆண்டு மட்டும் 21 புத்தொழில் நிறுவனங்கள் 28.10 கோடி ரூபாய் பயன்பெற்ற நிலையில் இத்திட்டத்தின் சிறப்பான வெற்றியைக் கருத்தில் கொண்டு 2023-24ஆம் நிதியாண்டிற்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்நிதியாண்டில் 5 பழங்குடியினர் மற்றும் 21 ஆதிதிராவிடர் நிறுவனங்கள் என மொத்தம் 26 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 13 நிறுவனங்கள் மகளிரால் நிர்வகிக்கப்படுபவை.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி, வணிகம் மற்றும் சேவை சார்ந்த புதிய தொழில் தொடங்க, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் இவ்வரசால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.100 கோடி நிதியை தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

★ தூய்மைப் பணியாளர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, 87,327 உறுப்பினர்களுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ பழங்குடியினர் ஆன்றோர் மன்றம், பழங்குடியினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியம் ஆகியவை திருத்தி அமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளன.

★ கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களையும் பட்டியலினத்தில் சேர்த்து அந்தப் பட்டியலின மக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை 2023 ஏப்ரலில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாகக் கொண்டு வந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

★ "சிறப்புக் கூறுகள் திட்டம் என அழைக்கப்பட்டு வந்த, ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் மாநில திட்ட ஒதுக்கீடான ரூ.77,930.30கோடியில், ஆதிதிராவிடர் துணைத்திட்டத்திற்காக ரூ.17,075.70 கோடி (21.91%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1595.89 கோடி (2.05%) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் (20.01%) மற்றும் பழங்குடியின மக்கள் தொகை (1.17%) விகிதாச்சாரத்தை விட அதிகமானதாகும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

★ நகர்ப்புற, ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட அயோத்திதாசர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் இலக்கு வைக்கப்பட்டது. - இவை அனைத்தும் கடந்த 41 மாதத்தில் செய்து தரப்பட்டவை ஆகும். இது பழனிசாமி கண்ணுக்குத் தெரியவில்லை. இவர் கண்ணை மூடிக் கொண்டு, 'ஆதிதிராவிடர் நலத்துறை இருக்கிறதா?' என்று கேட்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 'தாட்கோ' மூலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பல்வேறு இதர நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் முடங்கி இருந்தது. 'தாட்கோ' மூலம் தொழில் முனைவோரை ஊக்குவிக்க, மானியத்துடன் கூடிய கடன் வழங்க பெறப்பட்ட 3,963 விண்ணப்பங்கள் இருப்பில் வைக்கப்பட்டு, இம்மானியத்திற்கான தொகை ரூபாய் 52.01 கோடி விடுவிக்கப்படாமல் வங்கிகளில் நிலுவையில் இருந்தது. இதையும் விடுவித்தது தி.மு.க. ஆட்சிதான். தி.மு.க. ஆட்சியில் மொத்தம் ரூ.100 கோடிக்கான மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**பழனிசாமிக்கு பதில் அளித்து ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் வெளியிட்ட அறிக்கையில் முக்கியமான சில விளக்கங்களைச் சொல்லி இருந்தார். ஒன்றிய அரசால் வழங்கப்படும் நிதியானது இத்துறையால் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. கடந்த 2023-2024ஆம் ஆண்டில் PMAGY திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபாய் 186 கோடியும் SCAGrants in aid திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ரூபாய் 61 கோடியும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மதிவேந்தன் கூறியுள்ளார். ஆனால் தவறான தகவல்களைப் பரப்பி அவதூறுகளின் அடையாளமாக மாறி வருகிறார் பழனிசாமி.**

**"ஆதிதிராவிடர்க்கு நலத்திட்ட உதவி செய்வதோடு எங்கள் அரசின் கடமை முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை. சுயமரியாதைச் சமதர்மச் சமூகத்தை உருவாக்குவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்" என்பதையும் முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள். இவற்றுக்கும் பழனிசாமிக்கும் பல மைல் தூரம் ஆகும்.**

ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சராக உமர் அப்துல்லா நேற்று முன்தினம் பதவி ஏற்றுக் கொண்ட விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்றார். அதுபோது தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் (பவார்) கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே ஆகியோர் உடனிருந்தனர்.



## வெள்ளநீர் தங்குதடையின்றிச் செல்ல

# கூவம் முகத்துவாரத்தில் மணல் திட்டுகள் அகற்றும் பணி!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆய்வு!



நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2024) சென்னை, நேப்பியர் பாலம் அருகில், கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் மழைநீர் சீராக வடிகிறதா என்பதை நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை, அக்.19-

வெள்ள நீர் தங்கு தடையின்றிச் செல்ல கூவம் முகத்துவாரத்தில் மணல் திட்டுகளை அகற்றும் பணியினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2024) நேரில் ஆய்வு செய்தார்.

கூவம் ஆறு, வடக்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் மத்திய பக்கிங்காம் கால்வாய் ஆகியவை ஒன்றாக கலக்கும் 90 மீ அகலம் கொண்ட கூவம் முகத்துவாரமானது மணல் திட்டுகளின் அடைப்பினால் 50 மீ குறுகிய 40 மீ அகலம் மட்டுமே நீரோட்ட பகுதியாக இருந்தது. இதனை ரூ.70 கோடி மதிப்பீட்டில் வடக்கு பயிற்று சுவர் 265 மீ நீளம் மற்றும் தெற்கு பயிற்று சுவர் 310 மீ நீளம் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டு முகத்துவாரத்தில் அடைந்திருந்த மணல் திட்டுக்கள் முழுவதும் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியில் 1,75,000 மீ3 மணல் படிமானங்கள் அகற்றப்பட்டு மழை காலங்களில் வெள்ள நீர் வடியும்படி சுமார் 6 அடி ஆழத்திற்கு dredging பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியினால் கூவம், வடக்கு மற்றும் மத்திய பக்கிங்காம் கால்வாயிலிருந்து வரும் வெள்ள நீர் விரைந்து வடிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பணியினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது "இந்தாண்டு பெய்த மழையில் சென்னை மாநகரம் வெள்ளத்தால் அதிக இடங்கள் பாதிக்கப்படவில்லை. குறிப்பாக சிறப்பாக சென்னையில் வருகிற வெள்ளங்கள் இவையெல்லாம் கடலில் கலக்க வேண்டுமானால் அவைகளுக்கு 3 இடங்கள் தான் உண்டு. ஒன்று கூவம் வழியாக வெளியேற வேண்டும். அடையாறு பகுதியில் வெளியேற வேண்டும். இன்னொன்று எண்ணூர் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும்.

ஆனால் காலப்போக்கில் அதிகமான மணல் மேடுகள் ஆகி விட்ட காரணத்தாலும் இந்த தண்ணீர் வருகின்ற அளவுக்கு. முகத்துவாரங்கள் அகலமான வாய் உடையதாக இல்லாத காரணத்தால் தேங்கி நின்ற காரணத்தால். பல பிரச்சினைகள் ஏற்படுகிறன.

அதை இந்த ஆண்டு போக்க வேண்டும் என்று கூவம் முகத்துவாரத்தில் நிரந்தரமாக. வருடம் முழுவதும். திறந்திருக்கின்ற அளவுக்கு. இனி எந்த வெள்ளம் வந்தாலும் பாதிக்கக்கூடிய அளவுக்கு இல்லாமல் இருப்பதற்காக. தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்று எங்கள் துறை ஒரு திட்டத்தை கொடுத்தார்கள். இதை செய்து முடித்த காரணத்தால். இப்போ நீங்களே பார்க்கிறீர்கள். வெள்ளம் அடித்துக் கொண்டு இருக்கிறது. எவ்வளவு வெள்ளம் வந்தாலும் கூவத்தால் பாதிப்பு ஏற்படாது என தெரிவித்தார்".

இவ்வாய்வின்போது நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், நீர்வளத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா. மன்மதன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பையொட்டி – அக்.16, 17 இரு நாட்கள்

# 'அம்மா' உணவகங்களில் 1.28 இலட்சம் பேருக்கு இலவச உணவு!

## மழையில் 304 மருத்துவ முகாம்கள், 17,471 பேர் பயன்பெற்றனர்! நிவாரண முகாம்களில் 14.60 லட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்டது!

சென்னை, அக். 19 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி பெருமழை காரணமாக அக்டோர் 16, 17 இரண்டு நாள்களிலும் நிவாரண முகாம்களில் 14.60 இலட்சம் பேருக்கும் அம்மா உணவகங்கள் மூலம் 1.28 இலட்சம் பேருக்கும் உணவு வழங்கப்பட்டது.

304 மழைக்கால மருத்துவ முகாம்கள் மூலம் 17,471 பேர் பயன் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகரை அச்சுறுத்திய சிவப்பு எச்சரிக்கை மழை அறிவிப்பைத் தொடர்ந்து சென்னை மாநகரிலுள்ள அம்மா உணவகங்களில் 16, 17 ஆகிய இரண்டு நாள்களில் கட்டணமின்றி உணவு வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

மழைகாரணமாக வேலைக்குச் செல்லாத ஏழைகளுக்கு இந்த அறிவிப்பு பெரிதும் உதவியாக அமைந்தது. அதன்படி, அம்மா உணவகங்களில் 16.10. 2024 அன்று காலையில் இட்லி, பொங்கல் உணவும் பிற்பக லில் பல்வேறு கலவை சாத உணவுகளும் வழங்கப்பட்டன.

காலை, மாலை இரண்டு வேளையும் 78,557 பேர் கட்டணமில்லா உணவினைப் பெற்றுப் பயனடைந்தனர். அதேபோல, மாலையில் 29,316 ஏழைகளுக்கு சப்பாத்தி உணவு கட்டணமின்றி வழங்கப்பட்டது.

மழை காரணமாக வேலையும் வருமானமும் இல்லாமல் மக்கள் சிரமப்படுவார்கள் என்பதை எண்ணி அம்மா உணவகங்களில் கட்டணமில்லா உணவு வழங்க உத்தரவு பிறப்பித்து எங்களுக்கு உதவிபுரிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனதார எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம் என்று கட்டணமில்லா உணவு சாப்பிட்ட மக்கள் கூறினர்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மற்ற அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிவாரணப் பொருள்களை வழங்கினார்கள். குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் புளியந்தோப்பு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணி மேற்கொண்டிருந்த சென்னை மாநகராட்சி முன்களப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கமளித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மழைநிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார். அங்கு பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பெய்த பெருமழையால் சென்னை மாநகரம் 542 பகுதிகளில் மழைநீர் தேங்கத் தொடங்கியது. அந்தப் பகுதிகளில் எல்லாம் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் பம்ப்களை பயன்படுத்தி மழைநீர் தேங்க விடாமல் செய்த மாநகராட்சி பணியாளர்களை முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

தாழ்வான பகுதிகளில் குடியிருந்த மக்களை பாதுகாத்திட 300 நிவாரண மையங்கள் மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, குடிநீர் ஆகியவற்றை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். மழையில் பாதிக்கப் பட்டவர்களுக்கு மொத்தம் 2 நாட்களிலும் 14,84, 735 பேருக்கு உணவு விநியோகிக்கப்பட்டது.

சென்னை மாநகரம் முழுவதிலும் 304 மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றில் 17,471 பேருக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதையிலும் மழைநீர் அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டது.

திடீரென பெய்த பெருமழை காரணமாக மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோரும் மக்களுடன் சேர்ந்து மழை நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயத்தில் நடைபெற்ற திருமயம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் திருமயம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரதீப் ராஜா, மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் ஞான.இளங்கோவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், ஒன்றியச் செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன், பொன்.ராமலிங்கம், அ.முத்து, வி.ஆர்.இளையராஜா, அடைக்கலமணி, அ.அழகப்பன் மற்றும் இரா.மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, எம்.பி.சரவணன், சுப.துரைராஜா, முல்லை ரமேஷ் தி.மு.க. கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.